www.Padasalai.Net www.TrbTnpsc.com

RS-1

**12** - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# முதல் திருப்புதல் தேர்வு – 2025

# பொதுத் தமிழ்

மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

**I குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளுள் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதவும்.**

14 X 1 = 14

1. "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது ங) வள்ளல்களைத் தந்தது
அ) க மட்டும் சரி ஆ) க,உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க,ங இரண்டும் சரி
2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் அ) பருவநிலை மாற்றம்
ஆ) பாறைகள் இல்லாமை இ) மணல் அள்ளுதல் ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
3. "உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்? அ) இராமன், சவரி ஆ) இராமன், சுக்ரீவன் இ) இராமன், குகன் ஈ) சடாயு, இராமன்
4. வே.மாலி, செல்வம் என்ற புனைபெயர்களிலும் கவிதை எழுதியவர் அ) இராசகோபாலன்
ஆ) சிற்பி பாலசுப்பிரமணியம் இ) அய்யப்ப மாதவன் ஈ) சி.மணி
5. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| 1) வித்தியாரம்பம் | - i) எழுத்துப் பயிற்சி | | அ) 1-ii, 2-iii, 3-iv, 4-i |
| 2) வித்தியாப்பியாசம் | - ii) கல்வித் தொடக்கம் | | ஆ) 1-ii, 2-iv, 3-iii, 4-i |
| 3) உபாத்தியாயர் | - iii) கல்விப் பயிற்சி | | இ) 1-iii, 2-iv, 3-i, 4-ii |
| 4) அக்ஷராப்பியாசம் | - iv) ஆசிரியர் | | ஈ) 1-i, 2-iii, 3-iv, 4-ii |

6. "அறிவும் புகழும்" – என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) எண்ணும்மை ஆ) உவமைத்தொகை இ) உம்மைத் தொகை ஈ) அடுக்குத்தொடர்
7. **தவறான இணையைத் தேர்க.**

| பாவகை | இலக்கியம் |
|---|---|
| அ) ஆசிரியப்பா – | அகநானூறு |
| ஆ) விருத்தப்பா – | நாலடியார் |
| இ) கலிவெண்பா – | தூது |
| ஈ) குறள் வெண்பா– | திருக்குறள் |

8. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர் அ) மனத்திட்பம் உடையவர் ஆ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்
இ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர் ஈ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்
9. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி
10. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க அ) கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை வேய்ந்தார்.
ஆ) ஆட்டுப் பட்டியைச் சுற்றிலும் எலி வளைகள் அமைந்திருந்தன இ) பனை ஓலையால் கூரை வைத்திருந்தனர்
ஈ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன
11. யானை புக்க புலம்போல – இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்
அ) தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது ஆ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது
இ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்
12. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்.
காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது. அ) கூற்று சரி, காரணம் சரி
ஆ) கூற்று தவறு, காரணம் சரி இ) கூற்று தவறு, காரணம் தவறு ஈ) கூற்று சரி, காரணம் தவறு
13. 17 நரம்புகளைக் கொண்ட யாழ் ............ அ) செங்கோட்டியாழ் ஆ) பேரியாழ் இ) சகோடயாழ் ஈ) மகரயாழ்
14. 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' எனும் ஆங்கில நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல் ....................
அ) இரட்சணிய யாத்திரிகம் ஆ) இரட்சணிய மனோகரம் இ) மனோன்மணீயம் ஈ) போற்றித் திருஅகவல்

## பகுதி – II பிரிவு – 1

**II எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?
17. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடிந்துரைக்கிறார்?
18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

**III பிரிவு – 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. சங்க இலக்கியத்தில் குடும்பங்களின் வாழ்விடங்களைச் சுட்டும் பெயர்கள் நான்கினை எழுதுக.
20. புருவத்தே பயிர் செய் – நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. 'விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டோன்' – யார், யாரைப் பற்றி கூறுகிறார்?

**IV பிரிவு – 3 எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை எழுதுக.** 7 X 2 = 14

22. காப்பியச் சிற்றுறுப்புகள் சிலவற்றை எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
அ) குமரன் வீடு பார்த்தேன் ஆ) அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.
24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. அ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன. ஆ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.
25. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி எழுதுக. அ) ஒருமையுடன் ஆ) பெருந்தேர்
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. அ) வெங்காயம் (அல்லது) ஆ) தலைமை
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) ஆட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.
ஆ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சி. நீயும் புரிஞ்சிக்கோ.
28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) அமர்ந்தனன் ஆ) வியந்து
29. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. அ) வலம், வளம் ஆ) புல் – புள்
30. கலைச் சொல்லாக்கம் தருக. அ) Domestic Flight ஆ) Newsreel

## பகுதி – III பிரிவு – 1

**V எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

31. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
32. "வருபவர் எவராயினும்
நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
33. ஏதேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
34. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?

**VI பிரிவு – 2 எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 2 X 4 = 8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?
37. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?
38. திரைப்படத்தில் படத்தொகுப்பின் முக்கியத்துவத்தைக் குறித்து எழுதுக.

**VII பிரிவு – 3 எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 4 = 12

39. அ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
*(அல்லது)* ஆ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு
புகழ்வேறு; செல்வாக்கு வேறு ; காணும்
கண்வேறு கல்விக்கண் வேறு கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு – சுரதா.

41. அ) பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் ......... எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலின் திணையை விளக்குக. *(அல்லது)* ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.
42. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
அ) கபிலன் திறமையானவர் என்று .......................... *(குமரன்)* தெரியும்.
ஆ) நேற்று முதல் .................... *(அணை)* நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
இ) முருகன் .................... *(வேகம்)* சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
ஈ) நம்முடைய .................... *(தேவை)* அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.
43. தமிழாக்கம் தருக. அ) Education is a basic human right.
ஆ) Education is the key which opens many economic, social and political doors for people.
இ) Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems.
ஈ) Periyar was a great social revolutionary.

## பகுதி – IV

**VIII குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 X 6 = 18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக. *(அல்லது)*
ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. – நிறுவுக.
45. அ) "நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து" என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.
46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. *(அல்லது)* ஆ) உங்கள் ஊர்ப் பகுதியில் வாழும் கலைஞர் ஒருவரை நேரில் பார்த்த அனுபவத்தை விவரித்துக் கட்டுரையாக்குக.

## பகுதி – V

**IX அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

47. அ) 'துன்பு' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். ஆ) 'இல்' என முடியும் குறள்.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com